# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, மாச்சு மாதம் 31 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை :** ரூபா **தபாற் செலவு :** ரூபா

## 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டம்

[*2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச.வ.ஓ. 11/2006*

**2006 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டின் ஒவ்வொரு காலாண்டு தொடர்பில் எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவுமீது பொருளாதாரச் சேவை விதிப்பனவொன்றை விதிப்பதற்கும் ; 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் 1 இனைத் திருத்துவதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்பு டையனவும் அதற்கு இடைநேர்விளைவானவையுமான கருமங் களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

### பாகம் I

### பொருளாதாரச் சேவை விதிப்பனவொன்றை விதித்தல்

**2.** (1) இச்சட்டத்திற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டு ஆண்டின் ஒவ்வொரு காலாண்டுக்காக (இதனகத்துப்பின்னர் காலாண்டு "இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒவ்வோர் ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனவு வரவின் ஒவ்வொரு பாகம் தொடர்பிலும், அந்த இயைபான காலாண்டுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக (இதனகத்துப்பின்னர் "சேவை விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொருளாதாரச் சேவை விதிப்பனவொன்று அத்தகைய ஆளிடமிருந்தும் பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படல் வேண்டும். பொருளாதாரச் சேவை விதிப்பனவொன்றை விதித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஏதேனும் காலாண்டிற்கு எவரேனும் ஆளின் அல்லது பங்

காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவு பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில் அத்தகைய இயைபான காலாண்டிற்கு அத்தகைய ஆளிடமிருந்து அல்லது பங்காண்மையிடமிருந்து சேவை விதிப்பனவு விதிக்கப்படுதல் ஆகாது.

ஆயின், ஏதேனும் இயைபான காலாண்டுக்கு என ஆளெவரிடமிருந்தும் அல்லது பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படற்பாலதான சேவை விதிப்பனவு எவ்விடயத்திலும் பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது.

(3) இப்பிரிவில், —

(அ) "இயைபான மொத்த விற்பனை வரவு" என்பது, எவரேனும் ஆள் அல்லது பங்காண்மை அத்துடன் ஏதேனும் இயைபான காலாண்டு என்பன தொடர்பில் எவரேனும் ஆளினால் அல்லது பங்காண்மையினால் இலங்கையில் நேரடியாகவோ அல்லது முகவர் ஒருவர் ஊடாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முகவர் ஊடாகவோ கொண்டு நடாத்தப்பட்டதான அல்லது பிரயோகிக்கப்பட்டதான வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலின் அந்த இயைபான காலாண்டுக்கான கூட்டுமொத்த விற்பனை வரவு எனப் பொருள்படும்.

ஆயினும், ஏதேனும் இயைபான காலாண்டுக்கான இயைபான மொத்த விற்பனை வரவு எந்த வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலின் வர்த்தக செயற்பாடுகள் அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் அல்லது வேறெவரேனும் ஆளினால் அல்லது வேறேதேனும் பங்காண்மையினால் அந்த இயைபான காலாண்டின் முதலாவது நாளுக்கு உடன் முற்போந்த முப்பத்தாறு மாதங்கள் கொண்ட காலப்பகுதியினுள் வருகின்றதான தொரு தேதியன்று தொடங்கப்பட்டுள்ளதோ அந்த வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் வர்த்தகச் செயற்பாடுகளின் அந்த இயைபான காலாண்டுக்கான மொத்த விற்பனை வரவை உள்ளடக்குதலாகாது.

காப்புவாசகத்தின் நோக்கங்களுக்காக, எவரேனும் ஆள் அல்லது பங்காண்மை தொடர்பில் "வியாபாரம் அல்லது தொழில்" என்ற சொல்லமைப்பு ஆனது எவரேனும் ஆளினால் அல்லது பங்காண்மையினால் உற்பத்தி செய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத ஏதேனும் பொருட்களின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனையை கையாளுகின்ற ஏதேனும் வியாபாரம், தொழிலை உள்ளடக்குதலாகாது.

(ஆ) "மொத்த விற்பனை வரவு" என்பது, ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலும் அத்துடன் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டும் தொடர்பில், ஆளினால் அல்லது பங்காண்மையினால் கொண்டும் நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலின் போக்கில் இயைபான காலாண்டின் முன்னெடுக்கப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் களிலிருக்கும் உள்ளபடி பெற்றுக்கொண்டாலும்சரி இல்லாவிட்டாலும்சரி, பெறப்படற்பாலதான தொகையிலிருந்து —

(அ) (i) அத்தகைய மொத்தத் தொகையில், உள்ளடக் கப்பட்டதான அந்த கொடுக்கல், வாங்கல் தொடர்பில் எந்தத் தொகை சேர்பெறுமதி வரியைக் குறித்து நிற்கின்றதோ அந்த ஏதேனும் தொகையை, ஆயின் எந்த ஆள் அல்லது பங் காண்மை, அத்தகைய வியாபாரத்தை, தொழிலை, உயர்தொழிலை வாழ்க்கைத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றாரோ அல்லது நடாத்துகின்றாரோ அல்லது பிரயோ கிக்கின்றாதோ அல்லது பிரயோகிக்கின்றதோ அந்த ஆள் அல்லது பங்காண்மை அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின்போது 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப் பட்டிருப்பதாக, மொத்தத் தொகையிலிருந்து கழித்த பின்னரும் ;

(ii) ஏதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்த்தலில் இருந்து பெறப்பட்டதான வருமானம் அத்தகைய மொத்தத் தொகையில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் தொகையை கழித்தபின்னரும் ; அத்து டன்

(iii) அந்த அல்லது ஏதேனும் முன்னைய இயைபான காலாண்டின் அத்தகைய வியாபாரத்தின், தொழிலின் உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் இயைபான மொத்த விற்பனை வரவில் உள்ளடக்கப்பட்டிருந்த தொகையாகவிருக்கும் இயைபான காலாண்டின் போது அந்த வியாபாரத்தால், தொழிலால், உயர்தொழிலால் அல்லது வாழ்க்கைத் தொழிலால் பெறப்பட்ட ஏதேனும் அறவிட முடியாக் கடன் தொகையைக் கழித்தபின்னரும்; அத்துடன்

(ஆ) அதற்கான சேர்ப்பின் பின்னர், ஏதேனும் முன்னைய காலாண்டில் பதிவளிக்கப்பட்ட அல்லது அனு மதிக்கப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக்கடன் கணக்கின்மீது அந்த இயைபான காலாண்டின் போது பெறப்பட்ட ஏதேனும் தொகை,

ஆயினும், —

(அ) வங்கியொன்றின் விடயத்தில் அதன் தொழில் நெறிமுறையின்போது வங்கியால் பெறப்பட்ட வட்டி தள்ளுபடிகள், பங்கிலாபங்கள் செலா வணி சேவைக் கட்டணங்கள், தரகுகள், தரகுக் கூலி, அத்துடன் வேறு ஏதேனும் வருமானம் என்ற வகையில் அல்லது காரணமாக அத்த கைய வங்கியின் பெறுமதிகள் அத்தகைய வங்கி யின் மொத்தவிற்பனை வரவின் பாகமாக அமைகின்றதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆளொருவரின் விடயத்தில் —

(i) ஆயுள் காப்புறுதி ; அத்துடன்

(ii) வேலை நிறுத்தத்தால், கலவரத்தால் குடியியல் குழப்பத்தால் அல்லது பயங்கர வாதச் செயல்களினால் ஆன சேதங்களுக்கு அல்லது அழிவுக்கு எதிரானதும் திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்பட்டதுமான காப்புறுதி,

தொடர்பில் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான காப்புறுதிக் கட்டுப்பணம் அத்தகைய காப்புறுதித் தொழிலின் மொத்த விற்பனை வரவின் பாகமாக அமையாததாகக் கருதப்படுதல் வேண்டும்.

சேவை விதிப்பனவு இயைபான வருமான வரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

**3.** (1) ஏதேனும் இயைபான காலாண்டிற்காக எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட ஏதேனும் சேவை விதிப்பனவுத் தொகையானது (இதனகத்துப்பின்னர் "முதலிற் கூறப்பட்ட இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்த இயைபான காலாண்டு எந்த வரிமதிப்பீட்டாண்டுக்கான காலாண்டொன்றாக உள்ளதோ அந்த வரிமதிப்பீட்டாண்டு அந்த ஆளினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி ஏதேனும் இருப்பின் அதிலிருந்து கழிக்கப்படல் வேண்டும்.

(2) ஏதேனும் இயைபான காலாண்டுக்காக ஏதேனும் பங்காண்மையினால், செலுத்தப்பட்ட ஏதேனும் சேவை விதிப்பனவுத் தொகையானது, அந்த இயைபான காலாண்டு எந்த வரிமதிப்பீட்டாண்டின் காலாண்டாக இருக்கின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய பங்காண்மையின் இலாபங்களை அல்லது நட்டங்களை எந்த விகிதாசாரத்தில் அத்தகைய பங்காளர்கள் பகிர்கின்றார்களோ அந்த விகிதாசாரப்படி அத்தகைய பங்காண்மையின் பங்காளர்களிடையே பிரித்தொதுக்கப்பட வேண்டும், எவரேனும் பங்காளருக்கு அவ்வாறு பிரித்தொதுக்கப்பட்ட சேவை விதிப்பனவுத் தொகையானது (இதனகத்துப்பின்னர் "முதலிற் கூறப்பட்ட வரி மதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்த இயைபான காலாண்டு எந்த வரிமதிப்

பீட்டாண்டின் காலாண்டொன்றாக இருக்கின்றதோ அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய பங்காளரினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி ஏதேனும் இருப்பின் அதிலிருந்து கழிக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(3) ஒராம் உட்பிரிவிற்கிணங்க, அதன் கழிப்பனவின் பின்னர் எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட அத்தகைய சேவை விதிப்பனவின் மீதி ஏதேனும் இருப்பின், அம்மீதி (இதனகத்துப் பின்னர் "முதலில் அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டுக்கு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலிற் கூறப்பட்ட வரிமதிப்பீட்டாண்டை உடன் அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவிற்கிணங்க, அதன் கழிப்பனவின் பின்னர் (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க எவரேனும் பங்காளருக்கு பிரித்தொதுக்கப்பட்ட ஏதேனும் சேவை விதிப்பனவின்மீதி ஏதேனும் இருப்பின், அம்மீதி (இதனகத்துப்பின்னர் "முதலில் அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலில் கூறப்பட்ட வரிமதிப்பீட்டாண்டை உடன் அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தகைய பங்காளரினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து கழிக்கப்படல் வேண்டும்.

(5) விடயத்திற்கேற்ப (3) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவிற்கிணங்க, அதன் கழிப்பனவின் பின்னர், விடயத்திற்கேற்ப (3) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மீதியில் ஏதேனும் மிச்சம் இருப்பின் அது (இதனகத்துப்பின்னர் "இரண்டாவது அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலில் அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டை உடன் அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டிற்கு விடயத்திற்கேற்ப அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய பங்காண்மையின் அத்தகைய பங்காளரினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து கழிக்கப்படல் வேண்டும்.

(6) எந்தச் சூழ்நிலையிலும் –

(அ) விடயத்திற்கேற்ப, எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையினால் செலுத்தப்பட்டதும் எவரேனும் பங்காளருக்கு பிரித்தொதுக்கப்பட்டது

மான சேவை விதிப்பனவின் கூட்டுமொத்த கழிப்பனவுத் தொகையானது, விடயத்திற்கேற்ப, அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய பங்காண்மையின் அத்தகைய பங்காளரினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்தான அத்தகைய சேவை விதிப்பனவுத் தொகையினை விஞ்சுதலாகாது ;

(ஆ) (5) ஆம் உட்பிரிவிற்கிணங்க அதன் கழிப்பனவின் பின்னர் (5) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மிச்சத்தில் எஞ்சியுள்ள பாகம் ஏதேனும் இருப்பின், அது இரண்டாவதாக அடுத்துறும் வரிமதிப்பீட்டாண்டை அடுத்துறும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியிலிருந்து கழிக்கப்படுதல் ஆகாது.

சேவை விதிப்பனவின் எஞ்சியுள்ள பாகம் மீளளிக்கப் படுதலாகாது.

**4.** ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 3ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சேவை விதிப்பனவின் எஞ்சியுள்ள பாகம் மீளளிக்கப்படலாகாது.

விதிக்கப் படற்றகவு பற்றிய அறிவித்தல்.

**5.** ஏதேனும் இயைபான காலாண்டிற்கான சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலதான அல்லது விதிக்கப்படும் சாத்தியமுள்ள ஆளொவ்வொருவரும் அல்லது ஒவ்வொரு பங்காண்மையும், அந்த இயைபான காலாண்டின் இறுதி மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்பாக அத்தகைய விதிக்கப்படற்றகவு அல்லது விதிக்கப்படும் சாத்தியமுள்ளதகவு பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு முகவரியிடப்பட்டு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். அத்தகைய அறிவிப்பானது, விடயத்துக்கேற்றாற் போன்று, அத்தகைய ஆளுக்கு அல்லது பங்காண்மைக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்தொதுக்கப்பட்ட வருமான வரிக் கோவை இலக்கத்தை அல்லது தனிப்பட்ட ஆளடையாள இலக்கத்தை வெளிப்படுத்தல் வேண்டும்.

எத்தேதியில் சேவை விதிப்பனவு செலுத்தப்படல் வேண்டும் என்பது.

**6.** எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்காண்மையை ஏதேனும் இயைபான காலாண்டுக்காக விதிக்கப்படற்பாலதான சேவை விதிப்பனவு மதிப்பீடு, மதிப்பீட்டாளர் ஒருவரினால் அத்தகைய ஆள் அல்லது பங்காண்மைமீது செய்யப்பட்டிருக்கவில்லை என்பது எது எவ்வாறிருப்பினும், அந்த இயைபான காலாண்டின் முடிவில் உடனடுத்துறும் மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

விபரத் திரட்டுக்கான கொடுத்துதவுதல்.

**7.** ஏதேனும் இயைபான காலாண்டிற்கு, சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலதான ஆளொவ்வொருவரும் அத்துடன் பங்காண்மை ஒவ்வொன்றும் அதன் சார்பில் வரிமதிப்பீட்டாளர் ஒருவரால் தேவைப்படுத்தப்பட்டாலுஞ்சரி அல்லாவிட்டாலும்சரி, அந்த இயைபான காலாண்டின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்பு, ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் விபரங்களைக் கொண்டதும் விடயத்துக்கேற்றாற்போன்று அவரது அல்லது அதன் செலுத்துதகு விற்பனை வரவின் விபரத்திரட்டொன்றை வரிமதிப்பீட்டாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

பதிவேடுகளைப் பேணுதல்.

**8.** சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலரான ஆள் ஒவ்வொருவரும் அல்லது பங்காண்மை ஒவ்வொன்றும், இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் அத்கைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் கொடுத்துதவப்பட்ட இயைபான மொத்த விற்பனை வரவின் விபரத்திரட்டை அத்தகைய பதிவேட்டுடன் இணக்குதலை இலகுவாக்கக்கூடியவாறான அத்தகைய விதத்தில் அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படுகின்றதான ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலின் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

குறித்தசில விடயங்களில் வரிமதிப்பீடுகளை வரிமதிப்பீட்டாளர் செய்தல்.

**9.** வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் ஏதேனும் இயைபான காலாண்டுக்கு சேவை விதிப்பனவு விதிக்கப்படற்பாலரான அல்லது விதிக்கப்படற்பாலதாக உள்ள எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்காண்மை —

(அ) சேவை விதிப்பனவைச் செலுத்தியிராதவிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய இயைபான காலாண்டுக்கு, எந்தச் சரியான தொகை அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய பங்காண்மையினால் சேவை விதிப்பனவாகச் செலுத்தப்பட்டிருக்கவேண்டுமோ அந்தச் சரியான தொகையை விடக் குறைவான தொகையொன்றைச் செலுத்தியுள்ளவிடத்து ;

அத்தகைய வரிமதிப்பீட்டாளர், அந்த இயைபான காலாண்டிற்கு அவரது அபிப்பிராயத்தில் அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் சேவை விதிப்பனவாகச் செலுத்தப்பட்டிருக்கவேண்டிய சேவை விதிப்பனவுத் தொகையை மதிப்பீடுசெய்து எழுத்திலான அறிவித்தல்மூலம் –

(i) அந்த இயைபான காலாண்டிற்கு என அந்த ஆள் அல்லது பங்காண்மை சேவை விதிப்பனவு செலுத்தாதுவிட்டிருப்பின் அந்த இயைபான காலாண்டுக்கு அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்ட சேவை விதிப்பனவுத் தொகையை உடனடியாகச் செலுத்தும்படி ; அல்லது

(ii) அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்குச் சேவை விதிப்பனவாக ஏதேனும் தொகையை அத்தகைய ஆள் செலுத்தியிருந்தால், அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் அந்த இயைபான காலாண்டுக்கு உள்ளபடியாகச் செலுத்தப்பட்ட சேவை விதிப்பனவுத் தொகைக்கும், அவ்வாறு வரிமதிப்பீடு செய்யப்பட்ட சேவை விதிப்பனவுத் தொகைக்கும் இடையிலான வித்தியாசத்தைச் செலுத்தும்படி,

அத்தகைய ஆளை அல்லது பங்காண்மையைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

செலுத்தப்படாத சேவை விதிப்பனவு தவணை தவறுகையாகக் கருதப்படுதல்.

**10.** (1) ஏதேனும் இயைபான காலாண்டுக்கு ஏதேனும் சேவை விதிப்பனவு அல்லது அத்தகைய சேவை விதிப்பனவின் ஏதேனும் பாகமானது, அத்தகைய சேவை விதிப்பனவு, அத்தகைய தவணைக்கட்டணம் அல்லது அதன் பாகம் என்பவற்றின் கொடுப்பனவிற்காக 6 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாதிருக்குமிடத்து அது தவணைதவறுகையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தவணைதவறுகையிலுள்ள சேவை விதிப்பனவு அல்லது அதன் பாகம் –

(அ) தனியாளொருவரினால் ;

(ஆ) பங்காண்மை ஒன்றினால் ;

(இ) கம்பெனி அல்லது ஆட்கள் குழுவொன்றினால் ;

செலுத்தப்படற்பாலதாகவுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப அத்தகைய தனியாள் அத்தகைய பங்காண்மையின் பங்காளர் ஒருவர் அல்லது அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர் அல்லது வேறு தலைமை அலுவலர் அல்லது ஆட்கள் குழு இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தவணைதவறுகையிலுள்ள ஒருவர் எனக் கருதப் படுதல் வேண்டும்.

*உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகள் ஏற்புடையதாதல்.*

**11.** முறையே மேன்முறையீடுகள், வரிமதிப்பீடுகளின் முற்றாம் தன்மை அத்துடன் தவறான விபரத்திரட்டுகளுக்கான தண்டம், தவறுகையில் உள்ள வரியும், அதற்குச் சேர்க்கப்பட்ட பணத் தொகையும், வரியை அறவிடுதல், நானாவிதமான கருமங்கள், மீள்கொடுப்பனவு, தண்டங்களும் தவறுகளும், நிருவாகமும் பொதுக் கருமங்களும் தொடர்பிலான உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயங்கள் , XXIII, XXIV, XXV, XXVI,XXVII, XXVIII, XXIX, XXX, மற்றும் XXXI என்பனவற்றின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் முறையே இச்சட்டத்தின்கீழான மேன்முறை யீடுகள், வரிமதிப்பீடுகளின் முற்றாந்தன்மை அத்துடன் தவறான விபரத்திரட்டுகளுக்கான தண்டம், தவறுகையிலுள்ள சேவை விதிப்பனவும் அதற்குச் சேர்க்கப்பட்ட பணத்தொகைகளும், சேவை விதிப்பனவுகளை அறவிடல் நானாவித கருமங்கள், மீள்கொடுப் பனவு, தண்டங்களும் தவறுகளும் நிருவாகமும் பொதுக் கருமங்களும் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*ஒழுங்கு விதிகள்.*

**12.** (1) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமம் தொடர்பிலும் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர் Sபில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் மற்றும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப் பட்டுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் அமைச்சர் பின்வருவனவற்றிற்காக ஒழுங்குவிதிகளை ஆக்க லாம் —

(அ) அப்பிரிவில் "மொத்த விற்பனை வரவு" என்ற சொல்லமைப்பு வரைவிலக்கணத்திற்கான காப்பு வாசகத்திற்கு ஏதேனும் விடயம் தொடர்பில் ஏற்புடையதாகாது என 2ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக மொத்த விற்பனை வரவினை ஆராய்ந்தறிவது தொடர்பான வழிகாட்டிகளைக் குறித்துரைக்கும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளில், 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விதிக்கப்படற்பாலதாகாதென்பது ஏற்புடையதாகுமா இல்லையா என்ற நிலைமைகளைக் குறித்துரைக்கும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அதனில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அல்லது அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதிப்படக்கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் முன்னர் அதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதெனக் கருதப்படும் தேதியைப் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**13.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய — பொருள் கோடல்.

"முகவர்", "தேய்மானத்திற்கான கழிவு" அத்துடன் "வரிமதிப்பீட்டாளர்" என்பன உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அந்தந்தப் பொருளைக்கொண்டிருத்தல் வேண்டும் ;

"முதலீட்டுச் சபை தொழில்முயற்சி" என்பது ஏதேனும் இயைபான காலாண்டு தொடர்பில் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் நியதிகளின்படி எந்தத் தொழில்முயற்சி தொடர்பில் வருமானவரியிலிருந்து அதன் இலாபங்களினதும் வருமானத்தினதும் விலக்களிப்பு அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டு முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பகுதியில் வலுவிலிருக்கின்றதோ அந்தத் தொழில்முயற்சி என்று பொருள்படும் ;

"ஆட்கள் குழு", "தொழில்", "மூலதனச்சொத்து", "ஆணையாளர் தலைமையதிபதி" அத்துடன் "கம்பெனி" என்பன முறையே உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"விநியோகத்தர்", என்பது இலங்கையில் எவையேனும் பண்டங்களின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பில் அத்தகைய பண்டங்களை அத்தகைய உற்பத்தியாளரால் அல்லது தயாரிப்பாளரால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வகையில் மொத்த விற்பனைச் சந்தையில் விற்பனை செய்வதற்காக அத்தகைய உற்பத்தியாளரால் அல்லது தயாரிப்பாளரால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்காண்மை எனப்பொருள்படும் ;

"உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் அல்லது வருமானத்திற்கான வரிவிதிப்பதற்கு ஏற்பாடு செய்யும் ஏதேனும் பின்னுறும் சட்டம் எனப் பொருள்படும் ;

"பங்காண்மை", "வரும்படிகள்" அத்துடன் "இலாபங்கள் அல்லது வருமானம்" என்பன உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முறையே அவற்றிற்கு குறித்தொதுக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"ஆள்" என்பது கம்பெனியொன்றை அல்லது ஆட்கள் குழுவொன்றை உள்ளடக்கும் ; ஆனால்

(அ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தை ;

(ஆ) வானூர்தியொன்றின் அல்லது கப்பலொன்றின் ஒரு சொந்தக்காரராக அல்லது வாடகையாளராகத் தொழிலைக் கொண்டுநடாத்தும் வதிவற்ற ஆளொருவரையும்,

உள்ளடக்க மாட்டாது.

"காலாண்டு" என்பது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், அவ்வரிமதிப்பீட்டாண்டின் முறையே ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் அல்லது சனவரி மாதங்களில் முதல் நாளன்று தொடங்கும் மூன்று மாதகாலப் பகுதி எனப் பொருள்படும் ; அத்துடன்

"நியதிச்சட்ட வருமானம்", "வரிவிதிக்கற்பாலதான வருமானம்", "வியாபாரம்", வரிமதிப்பீட்டாண்டு" என்பன உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முறையே அவ்வவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதேபொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் II

## 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் ஒன்றினைத் திருத்துதல்

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் ஒன்றினைத் திருத்துதல்*

**14.** 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் I ஆம் பாகம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அதன் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவில் "2004, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டு ஆண்டுக்காகவும் (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "இயைபான

வரிமதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்)" என்ற சொற்களுக்குப் பதிலாக "2004 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குவதும் 2006 மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் (இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் "இயைபான வரிமதிப்பீட் டாண்டு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்)" என்ற சொற் களை இடுவதன்மூலமும் ;

(2) அதன் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என் னும் பந்தியில் (2005 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) "விடயம் (2)" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "விடயம் (3)" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்,

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பாகம் 1 ஏற்புடைய தாகாது.*

**15.** 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் 1இன் ஏற்பாடுகள், 2006 ஆம் ஆண்டின் ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமையிலிருந்து பொருளாதாரச் சேவை விதிப்பனவை விதிப்பதற்கு ஏற்புடையதாகாதென சந்தேகத்திற்கிட மின்றி இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** (பிரிவு 2(1))

| செலுத்துதகு விற்பனை வரவின் பாகம் | அப்பாகத்திற்கு ஏற்புடையதான சேவை விதிப்பனவு வீதம் |
|---|---|
| 1. எவ்வேதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில், வாழ்க்கைத்தொழிலிருந்தான இலாபமும் வரவும் வருமான | 0.25 சதவீதம் |

| | |
|---|---|
| வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளதோ அத்தகையவற்றிலிருந்தான மொத்த விற்பனை வரவை அடக்கியுள்ள இயைபான விற்பனை வரவின், அத்தகைய பாகம் | |
| 2. 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள ஏதேனும் வர்த்தகத்தில், வியாபாரத்தில் உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்தான மொத்த விற்பனை வரவை அடக்கியுள்ளதான இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம். | |
| (i) அத்தகைய தொழிலின் இலாபங்களும் வருமானமும் எந்தக் காலப்பகுதிக்கு அத்தகைய உடன்படிக்கையின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனவோ அந்தக் காலப்பகுதியின் போதான இயைபான மொத்த விற்பனை வரவாக இருக்கையில் | 0.25 சதவீதம் |
| (ii) அத்தகைய தொழில் முயற்சியின் இலாபங்களும் வருமானமும் எந்தக் காலப்பகுதிக்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வீதமொன்றுக்குச் சமமான வீதத்தில் வரிவிதிக்கப்படற்பாலனவோ அந்தக் காலப்பகுதியின் போதான இயைபான மொத்த விற்பனை வரவாக இருக்கையில் | 0.50 சதவீதம் |
| 3. ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில், | 0.5 சதவீதம் |

| | | |
|---|---|---|
| | வாழ்க்கைத் தொழிலிருந்தான இலாபமும் வரவும் உண்ணாட்டரசிறைச் சட்டத்துக்கான அட்டவணையின் 28 ஆம் விடயத்திற் தவிர, அதன் ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலதோ அத்தகையவற்றிலிருந்தான மொத்த விற்பனை வரவை அடக்கியுள்ள இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் | |
| 4. | ஏதேனும் வியாபாரம் தொழில், உயர்தொழில், வாழ்க்கைத் தொழிலிருந்தான இலாபமும் வரவும் உண்ணாட்டரசிறைச் சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வீதம் தவிர்ந்த வேறு ஏதேனும் வீதத்தில் வருமான வரி விதிக்கப்படற்பாலதோ அத்தகையவற்றிலிருந்தான மொத்த விற்பனை வரவை அடக்கியுள்ள இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் | 1.0 சதவீதம் |
| 5. | வியாபாரியால் உற்பத்தி செய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத அத்தகைய பொருட்களின் மொத்த விற்பனையை (விநியோகத்தர் ஒருவராகத்தவிர) அல்லது சில்லறை விற்பனையைக் கையாளுகின்ற ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்திலிருந்தான மொத்த விற்பனை வரவை அடக்கியுள்ள இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம். | 0.5 சதவீதம் |
| 6. | ஏதேனும் மதுசாரம் கலந்த குடிவகையை தயாரிக்கும் ஏதேனும் அத்தகைய மாற்றத்தைத் தவிர்ந்த ஏதேனும் தேயிலை, இறப்பர் அல்லது தென்னை | 0.5 சதவீதம் |

| | |
|---|---|
| பெருந்தோட்டத் துறையின் ஏதேனும் உற்பத்தியின் முதல் நிலை மாற்றத்திலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளதான இயைபான மொத்த விற்பனை வர வின் அத்தகைய பாகம். | |
| 7. விநியோகத்தர் ஒருவரின் ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்தில் இருந்ததான மொத்த விற்பனை வரவை அடக்கியுள்ளதான இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம். | 0.1 சதவீதம் |
| 8. உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையின் 28 ஆம் விடயத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயற்பாட்டைக் கொண்டு நடாத்தும் ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்திலிருந்தான மொத்த விற்பனை வரவை அடக்கியுள்ள இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம். | 1.00 சதவீதம் |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்